மஹா விகாரையின் ஸ்ரீ சித்தார்த்த சரணங்கர நலன்புரி மன்றம் மற்றும் வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து மதியுரைகளையும் மற்றும் நிதி உதவியினையும் பெறுதல் ;

(ஈ) பௌத்த மதம் தொடர்பான அபிவிருத்திச் செயற்பாடுகளினை விருத்தி செய்வதற்கான வசதிகள் அளிக்கப்பட்ட, ஏறத்தாழ நூறு பௌத்த பிக்குமார்களுக்கான வதிவிட வசதிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் ;

(உ) இயைபான அதிகாரசபையின் உதவியுடன் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் நேர்மையான தொழிலை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையை உருவாக்குதல் ;

(ஊ) ''ஆலயத்திலிருந்து மக்களுக்கு'' என்னும் கருத்தின் அடிப்படையின் மீது ஆலயங்கள் ஊடாக பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களுக்குப் பலதரப்பட்ட வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(எ) பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் உள்ள இளைஞர்களை ஒழுக்கக் கோட்பாடுகளால் வழிநடத்தப்பட்ட நேர்மையான வாழ்க்கைப்பாதைக்கு அவர்களை இட்டுச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ஏ) சமூகத்திற்கு அச்சுறுத்தலாகவுள்ள போதைவஸ்துப் பழக்கத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ;

(ஐ) பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களுக்காக ஆலய வளவினுள் முன் பள்ளிகளைத் தொடங்குவதனை ஊக்குவித்தலும் மற்றும் சிறுவர்களை சமய வாழ்க்கையொன்றிற்கு இட்டுச் செல்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் ; அத்துடன்

